# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108572

1. District : சென்னை / மாவட்டம் — PS / காவல்நிலையம்: நகரப்பிரிவு-5 [illegible] — Year / ஆண்டு: 2023 — FIR No. / மு.த.அ. எண்: 03/2023 — Date / நாள்: 20.09.2023

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988இன் — Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 — Sections பிரிவுகள்: —

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள் — Date from : / நாள் முதல் 14.09.2023 — Date to : / நாள் வரை

   Time Period : / நேர அளவு — Time from : / நேரம் முதல் 16.00 hrs — Time to : / நேரம் வரை

   (b) Information Received at PS. Date : / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.09.2023 — Time : / நேரம் 18.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.09.2023 — Time : / நேரம் 18.00 hrs

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 10 கி.மீ, தென்கிழக்கு

   Beat Number : / முறைக் காவல் எண் —

   (b) Address : / முகவரி இளநிலை பொறியாளர் அலுவலகம், மின்வாரியம் பெசன்ட் நகர், சென்னை.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : / மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. திருத்தணிகுமார் — (b) Father's/ Husband's Name : / தந்தை / கணவர் பெயர் ராமதாஸ்

   (c) Date / Year of Birth : / நாள் / பிறந்த ஆண்டு 50 வயது — (d) Nationality : / நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : / வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : / வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : / தொழில் கார் ஓட்டுனர் — (g) Address : / முகவரி எண். A1501, ஒடியம்மல் மேன்ட்ரின், பழைய மல்லாவரம் சாலை, துரைப்பாக்கம், சென்னை - 97

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. பாலசுப்பிரமணியன், இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், (TANGEDCO), பெசன்ட் நகர், சென்னை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   இல்லை

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

இல்லை

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.09.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ........................
Rank: நிலை ........................ No. எண் .........

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**...continuation to column No.12 of FIR in Crime No.03/AC/2023/CC-V**

பணிந்தனுப்பப்படுகிறது. 19.09.2023-ந்தேதி மாலை 06.00 மணிக்கு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-5ன் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது புகார்தாரர் திரு.ஆர்.கிருஷ்ணகுமார், த/பெ ராமதாஸ், எண்.A1501, ரேடியல்ஸ் மேன்டரின், பழைய பல்லாவரம் சாலை, துரைபாக்கம், சென்னை-97 என்பவர் என் முன்பாக ஆஜராக ஒரு புகார் மனுவினை சமர்ப்பித்தார். அப்புகார் மனுவினை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையகத்திற்கு தகவல் தெரிவித்து, புகார் மனு சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.பாலசுப்பிரமணியன், இளநிலைப் பொறியாளர், TANGEDCO, பெசன்ட் நகர், சென்னை மற்றும் புகார்தாரர் திரு.ஆர்.கிருஷ்ணகுமார் ஆகியோர்களின் முன் நடத்தையும், புகார்மனுவின் உண்மைதன்மையும் இரகசிய விசாரணை செய்யப்பட்டன. எனது இரகசிய விசாரணையில் புகார் மனுவில் குற்றச்சாட்டிற்கான முகாந்திரம் காணப்பட்டதால் உரிய உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு, இப்புகார்மனுவின் தன்மைக்கேற்ப ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018-ன் படி திருத்தப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 7(a) ன் படி இன்று (20.09.2023) காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்மனுவின் விவரம் பின்வருமாறு:- அனுப்புனர் R.கிருஷ்ணகுமார், த/பெ.ராமதாஸ், எண்.A1501, ரேடியல்ஸ் மேன்ட்ரின், பழைய பல்லாவரம் சாலை, துரைப்பாக்கம், சென்னை-97, பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்புத் துறை, ஆலந்தூர், சென்னை. அய்யா, நான், எண்.A1501, ரேடியல்ஸ் மேன்ட்ரின், பழைய பல்லாவரம் சாலை, துரைப்பாக்கம், சென்னை-97 என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வாடகைக் கார் ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். என் உடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா திருமதி.லாவண்யா, நான், ஒரு தம்பி திரு.ரஞ்ஜித்குமார் மற்றும் ஒரு தங்கை திருமதி.கோமதிமேனகாதேவி ஆவோம். எங்கள் தகப்பனார், திரு.ராமதாஸ் அவர்கள் எண்.26/35, புதிய தெரு, தாமோதரபுரம், அடையாறு, சென்னை-20 என்ற முகவரியில் தனக்கு பாத்தியப்பட்ட சுமார் 850 சதுரடி பரப்பளவுள்ள இடத்தில் நான்கு ஓட்டு வீடுகள் கட்டியிருந்தார். அவர் கடந்த 1998-ம் ஆண்டு இறந்துவிட்டார். சகோதர சகோதரிகள் மேற்படி இடத்தை எனது அனுபவ

பாத்தியத்தில் விட்டுவிட்டார்கள். நான் அந்த இடத்தில் கடந்த 2019-ம் ஆண்டு ஆறு குடியிருப்புகள் கொண்ட வீட்டை கட்ட ஆரம்பித்து இந்த ஆண்டு (2023) கட்டி முடித்தேன். இந்த ஆறு வீடுகளில் நான்கு வீட்டிற்கு பெசன்ட் நகர் மின் அலுவலகத்தில் மின் இணைப்பு பெற்றேன். மேலும், இந்த ஆறு வீட்டிற்கு பொதுவாக ஒரு மின் இணைப்பும் ஆக மொத்தம் ஐந்து மின் இணைப்புகள் பெற்றுள்ளேன். இந்நிலையில், இந்த குடியிருப்பில் உள்ள மற்றொரு வீட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்கு பெசன்ட் நகர் மின் வாரிய அலுவலகத்திற்கு கடந்த 14.09.2023 அன்று மாலை சுமார் 04.00 மணிக்கு சென்று மின் இணைப்பு சம்பந்தமாக அங்குள்ள இளநிலைப் பொறியாளர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்களை சந்தித்து பேசினேன். அவர், மின் இணைப்பு பெறுவதற்கு மின் வாரியத்திற்கு பணம் செலுத்தவேண்டும் என்றும், அது போக செலவு நிறைய இருப்பதால் தனக்கு லஞ்சமாக ரூ.40,000/- தனியாக தரவேண்டும் என்று கேட்டார். நான் என்னால் அவ்வளவு தொகை லஞ்சமாக தரமுடியாது என்று கூறினேன். தனக்கு தனியாக லஞ்சம் தராவிட்டால் மின் இணைப்பு கிடைக்காது என்று கூறினார். தொகையை கொஞ்சம் குறைத்துக்கொள்ள கேட்டேன். அவர் முடியாது என்று கூறிவிட்டார். ஆனால், முதல் தவணையாக ரூ.10,000/- தரும்படியும், மின் இணைப்பு கொடுத்தபின்னர் மீதி தொகை ரூ.30,000/- தரவேண்டும் என்று கண்டிப்புடன் தெரிவித்தார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று தெரிவித்தேன். 14.09.2023-ம் அன்று எனது மின் இணைப்பு மனுவை பதிவு செய்தார்கள். மின் வாரியத்திற்கு செலுத்தக்கூடிய கட்டணத்தை நான், 15.09.2023 அன்று மாலை சுமார் 04.15 அளவில் பெசன்ட் நகர் மின் வாரிய அலுவலகம் சென்று எனது மனைவி திருமதி.லஷ்மிபிரியா அவர்களின் கிரிடிட் கார்டு மூலம் கட்டணம் ரூ.33,972/- செலுத்தினேன். பின்னர், பெசன்ட் நகர் மின்வாரிய அலுவலகத்தில் இருந்த திரு.பாலசுப்பிரமணியன் அவர்களை சந்தித்து மீண்டும் அவருக்கு கொடுக்க வேண்டிய லஞ்சப்பணத் தொகை குறித்து கேட்டபோது, தனக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்தால்தான் மின் இணைப்பு கிடைக்கும் என்று கண்டிப்புடன் கூறிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று கூறி வந்துவிட்டேன். எனக்கு லஞ்சப்பணம் கொடுத்து எனது வீட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்கு விருப்பம் இல்லை. எனவே, தெரிந்தவர்களிடம் விசாரித்ததில் லஞ்சஒழிப்பு துறையில் புகார் செய்யலாம் என்று கூறினார்கள். எனவே, பல்வேறு

அத்தியாவசியப் பணிகள் இருந்ததால் அவற்றை முடித்துவிட்டு இன்று 19.09.2023 தேதி மாலை 06.00 மணிக்கு உங்கள் அலுவலகம் வந்து இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். அவர் முதல் தவணையாக கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000/- நான் கொண்டுவந்துள்ளேன். எனது வீட்டிற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு லஞ்சம் கேட்ட பெசன்ட் நகர் மின் வாரிய இளநிலைப் பொறியாளர் திரு.பாலசுப்பிரமணியன் என்பவர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒம்) R.கிருஷ்ணகுமார், 19.09.2023. சமர்ப்பிக்கிறேன், மேற்படி புகார் மனுவினை 19.09.2023-ம் மாலை 06.00 மணிக்கு பெற்று, மனு குறித்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்திற்கு தகவல் தெரிவித்து, இந்த புகார் மனு குறித்தும் புகார் மனுவில் கூறப்பட்டுள்ள சென்னை பெசன்ட் நகர் மிசார வாரிய இளநிலை பொறியாளர் திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் வழக்கின் புகார்தாரர் திரு.ஆர்.கிருஷ்ணகுமார் ஆகியோர்களின் முன்நடத்தை குறித்தும் ரகசிய விசாரணை மேற்கொண்டேன். ரகசிய விசாரணையில் புகாரின் தன்மை உண்மை எனத் தெரியவந்ததால் உரிய அனுமதி பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப சென்னை ஊ.த.(ம).க.துறை, சென்னை நகர பிரிவு குற்ற எண்.03/2023-ன்படி திருத்தப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டம் 1998 பிரிவு 7(a) ன் படி இன்று 20.09.2023 காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். (ஒம்) தி.கந்தசாமி, 20.09.2023 (தி.கந்தசாமி), DSP, CCV, V&AC, Chennai-16. வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றினை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், சென்னை அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் வைத்தேன்.

20/9/23

Deputy Superintendent Of Police,
Vigilance And Anti-Corruption,
Chennai City-V,
Chennai-600 016.